




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








ஞாயிறு ❖ நவம்பர். 27, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 53 ❖ ரூ.10


### இந்தித் திணிப்புக்கு எதிராக 85 வயது தி.மு.க., தொண்டர்

# தீக்குளிப்பு !

## இந்தியைத் திணிப்போர் செவிகளுக்கு எட்டும்வரை ஓயப்போவதில்லை இன்னுயிரை இழக்க வேண்டாம்: முதல்வர் ஸ்டாலின் இரங்கலில் கூளுரை!

சேலம், நவ.27–

மத்திய அரசின் இந்தித் திணிப்புக்கு எதிராக தாழையூரைச் சேர்ந்த 85 வயது தி.மு.க., தொண்டர் தன் உடலில் பெட்ரோல் ஊற்றி தீக்குளித்து உயிரிழந்தார். அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள தி.மு.க., தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின், "போராட்ட வடிவமாக இன்னுயிரை இழக்கும் செயல்களில் யாரும் ஈடுபட வேண்டாம். இந்தியைத் திணிக்கும் ஒன்றிய அரசின் செவிகளுக்கு எட்டும் வரை நாம் ஓயப்போவதில்லை," என்று தெரிவித்துள்ளார்.




சேலம் மாவட்டம் மேட்டூரை அடுத்துள்ள தாழையூரில் உள்ள தி.மு.க., கட்சி அலுவலகம் முன், அக்கட்சியின் முன்னாள் ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் தங்கவேல் உடலில் பெட்ரோல் ஊற்றி தீக்குளித்தார். அவருக்கு வயது 85. இவருக்கு மனைவியும், இரண்டு மகன்களும் உள்ளனர். தி.மு.க., மீது கொண்ட பற்றால், கட்சி சார்பில் பல்வேறு போராட்டங்களில் சிறைக்குச் சென்றுள்ளார்.

முன்னாள் முதல்வர் கருணாநிதியிடமிருந்து பல்வேறு பரிசுகள், பாராட்டுகளைப் பெற்றவர் தங்கவேல். இவர், மத்தியில் பா.ஜ.க., அரசு பொறுப்பேற்றதில் இருந்து,இந்தியை திணித்து வரும் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்ததால் தங்கவேல் மன உளைச்சலில் இருந்துள்ளதாகதெரிகிறது.

இந்நிலையில், நேற்று (நவ.26) காலை, பி.என். பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட 18-வது வார்டு தாழையூர் தி.மு.க., அலுவலகம் முன் காலை 11 மணியளவில் தனது உடலில்பெட்ரோல் ஊற்றி தங்கவேல் தீவைத்துக் கொண்டார். அவரது அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் வந்து தீயை அணைத்தனர். ஆனால், சம்பவ இடத்திலேயே தங்கவேலு உடல் கருகி பலியானார்.

தங்கவேல் தீக்குளிப்பதற்கு முன், பி.என்.பட்டி பேரூர் செயலாளருக்கு கடிதம் ஒன்றை எழுதி வைத்துள்ளார். அதில், "மோடி அரசே, மத்திய அரசே, இந்தி வேண்டாம். தாய் மொழி இருக்க இந்தி கோமாளி எதற்கு? இந்தி எழுத்து மாணவ, மாணவிகள் வாழ்க்கையைப் பாதிக்கும். இந்தி ஒழிக... இந்தி ஒழிக..." என்ற வாசகத்தை எழுதி வைத்துள்ளார். இச்சம்பவம் அப்பகுதியில் உள்ள மக்களிடமும், கட்சியினரிடமும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தங்கவேல் உயிரிழந்ததையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியில் தெரிவித்திருப்பதாவது:

சேலம் மாவட்டம் நங்கவள்ளி பகுதி தாழையூரைச் சேர்ந்த தி.மு.க., விவசாய அணி முன்னாள் ஒன்றியப் பொறுப்பாளர் தங்கவேல், இந்தித் திணிப்பிற்கு எதிராகத் தன்னுடலைத் தீக்கிரையாக்கிக் கொண்டார் என்றறிந்து வேதனையில்உழல்கிறேன். இந்தித் திணிப்புக்கு எதிராக உயிர்த்தியாகம் செய்துள்ள தாழையூர் தங்கவேலுவுக்கு வீரவணக்கம். இந்தித் திணிப்பை எதிர்த்து அரசியல்ரீதியாக - ஜனநாயக வழியில் தொடர்ந்து போராடுவோம். ஏற்கெனவே ஏராளமான தீரர்களை இழந்துவிட்டோம். இனி ஒரு உயிரையும் நாம் இழக்கக் கூடாது.

போராட்டவடிவமாக இன்னுயிரை இழக்கும் செயல்களில் யாரும் ஈடுபட வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்.

பன்முகத்தன்மைக் கொண்ட அழகிய நாட்டைக் குறுகிய மனப்பான்மையால் குலைத்திட வேண்டாம். 'இந்தியைத் திணிக்காதே' எனக் காலங்காலமாய் நாம் உரத்துச் சொல்லும் முழக்கம் ஆதிக்க மனப்பான்மையில் இந்தியைத் திணிக்கும் ஒன்றிய அரசின் செவிகளுக்கும் இதயத்துக்கும் எட்டும்வரை நாம் ஓயப்போவதில்லை.

தாழையூர் தங்கவேலுவின் குடும்பத்துக்கும், கட்சியினருக்கும், இரங்கலையும், ஆறுதலையும்தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை, ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஈவிகேஎஸ். இளங்கோவன் பேத்தியும், சட்டமன்ற உறுப்பினர் இ. திருமகன் ஈவெராவின் மகளுமான சமணா ஈவெரா சந்தித்து, பெங்களூரில் கடந்த வாரம் நடைபெற்ற FEI World Equestrian Dressage Challenge 2022 குதிரையேற்றப் போட்டியில் இந்திய அளவில் முதலிடம் பிடித்து ஜூனியர் சாம்பியன் கோப்பையை வென்றதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது தாயார் பூர்ணிமா, பயிற்சியாளர் கிஷோர் பெர்டானி ஆகியோர் உள்ளனர்.

# அரசு இலவச பஸ் பயணம் மூலம் மாதம் ரூ.888 சேமிக்கும் பெண்கள் !

### தமிழக திட்டக்குழு ஆய்வில் தகவல்

சென்னை, நவ.27–

தமிழக அரசின் இலவசப் பேருந்து பயணம் மூலம் பெண்கள் மாதம் ரூ.888 சேமிக்கின்றனர் என்று தமிழக திட்டக் குழுவின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் கடந்தாண்டு மே 7ம் தேதி பதவியேற்ற உடன் 5 கோப்புகளில் கையெழுத்திட்டார். இதில், 'நகரப் பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம்' என்ற திட்டமும் இடம்பெற்றிருந்தது. இத்திட்டம்,மே 8ம் தேதி முதலே நடைமுறைக்கு வந்தது. இதில், நகர்ப்புறங்களில் வெள்ளை போர்டு கொண்ட பேருந்துகளிலும், கிராமப்புறங்களில் நகரப் பேருந்துகளிலும் செயல்படுத்தப்பட்டது.



தமிழகத்தில் நகரப் பேருந்துகளில்பெண்களுக்கான கட்டணமில்லா பயணம் திட்டத்தின் கீழ் கடந்த அக்டோபர் 5ம் தேதி வரை 176.84 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போக்குவரத்துத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது. நாள் ஒன்று சராசரியாக 39.21 லட்சம் பேர் பயணம் செய்கின்றனர் என போக்குவரத்துத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த இலவசப் பேருந்து பயணம் மூலம் பெண்களுக்கு, ஒரு மாதத்திற்கு சராசரியாக 888 ரூபாய் மிச்சம் ஆவதாக மாநில திட்டக்குழு நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த ஆய்வு அறிக்கை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் நேற்று (நவ.26) வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வானது தமிழகத்தில் 3 மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளது. விவசாயிகள் அதிகமுள்ள நாகப்பட்டினம், தொழிற்சாலைகள் அதிகமுள்ள திருப்பூர், தொழில்கள் மற்றும் சுற்றுலா அதிகமுள்ள மதுரை ஆகிய மாவட்டங்களில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் 4ம் தேதி முதல் 30ம் தேதி வரை நேரடியாக ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. நாகையில் 416 பேர், மதுரையில் 422 பேர், திருப்பூரில் 437 பேர் என்று இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

ஆய்வில், இலவச பேருந்து பயணம் செய்வதால் பெண்கள் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 888 ரூபாயை சேமிப்பது தெரியவந்துள்ளது. இதன் மூலம் தினசரி போக்குவரத்து செலவுக்கு குடும்ப உறுப்பினர்களை நம்பி இருப்பது குறைந்துள்ளதாகவும், போக்குவரத்து செலவுகளில் மிச்சமாகும் தொகையை வீட்டுச்செலவுக்கு பயன்படுத்தி கொள்வதும் தெரியவந்துள்ளது.



சென்னை, பல்லவன் இல்லம், மாநகர் போக்குவரத்து கழக மத்திய பணிமனையில், போக்குவரத்து துறை அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கர், இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி கே சேகர்பாபு, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் சென்னை மாநகர போக்குவரத்துக் கழக பேருந்துகளில் முதற்கட்டமாக புவிசார் நவீன தானியங்கி அறிவிப்பான் (GPS) மூலம் பேருந்து நிறுத்தம் ஒலி அறிவிப்பு திட்டத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். உடன், போக்குவரத்து துறை அரசு முதன்மைச் செயலாளர் கோபால் மற்றும் போக்குவரத்து துறை அலுவலர்கள் உள்ளனர்.

# நிலவின் சுற்றுப்பாதைக்குள் ஓரியன் விண்கலம் நுழைந்தது

வாஷிங்டன், நவ.27–

நிலவுக்கு மீண்டும் மனிதனை அனுப்ப திட்டமிட்டுள்ள அமெரிக்கா விண்வெளி கழகமான நாசா, ஆர்டெமிஸ் திட்டத்தை தொடங்கியுள்ளது.

இதில் முதற்கட்டமாக சோதனை முயற்சியாக ஓரியன் விண்கலம், ராக்கெட் மூலம் நிலவுக்கு வெற்றிகரமாக ஏவப்பட்டது. மனிதர்கள் இல்லாமல் ஏவப்பட்ட ஓரியன் விண்கலம், நிலவின் சுற்று வட்டப்பாதை அருகே சென்றது. விண்கலம் புறப்பட்ட ஒரு வாரத்துக்கு பிறகு நிலவின் சுற்று பாதையில் நிலைநிறுத்த அதனை கட்டுப்பாட்டு அறையில் இருந்த விஞ்ஞானிகள் இயக்கினர். இந்த நிலையில் ஓரியன் விண்கலம் வெற்றி கரமாக நிலவின் சுற்றுவட்ட பாதையில் நிலைநிறுத்தப் பட்டதாக நாசா அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது. இதனை தனது இணையதள பக்கத்தில் தெரிவித்துள்ளது.



மேலும் ஓரியன் விண்கலம் நிலவின் சுற்று வட்டப்பாதைக்குள் நுழையும் வீடியோவையும் நாசா வெளியிட்டு உள்ளது. 25 நாட்களுக்கும் மேலான பயணத்துக்கு பிறகு ஓரியன் விண்கலத்தை வருகிற டிசம்பர் 11-ந் தேதி பசிபிக் பெருங்கடலில் தரையிறக்க திட்டமிடப் பட்டுள்ளது. இந்த சோதனை முயற்சி வெற்றி, என்பது ஆர்டெமிஸ்-2 பணியின் செயல்பாட்டை தீர்மானிக்கும்.

இது விண்வெளி வீரர்களை தரையிரங்காமல் நிலவை சுற்றி அழைத்து செல்லும். இறுதியாக ஆர்டெமிஸ்-3 திட்டத்தில் மனிதர்கள் நிலவில் இறங்கி பூமிக்கு திரும்பும் திட்டம் தொடங்கப்படும். இந்த பணிகள் முறையே 2024 மற்றும் 2025-ம் ஆண்டுகளில் நடைபெற உள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.


எல்லா புகழும் இறைவனுக்கு

**S. ஹவ்வா பீவி சாகுல் அமீது அவர்களின்**

**5–ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு**

**M.N. கண் மருத்துவமனை இணைந்து நடத்தும்**

ஜானகி நடராஜன் கண் பார்வை ஆராய்ச்சி (ம) மறுவாழ்வு அறக்கட்டளை சென்னை மாவட்ட கண்பார்வை இழப்பு தடுப்பு சங்கம்

**இலவச கண் பரிசோதனை மற்றும் கண் அறுவை சிகிச்சை முகாம்**

நாள் : 27-11-2022 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை

இடம் : திருமால் முருகன் திருமண மண்டபம்
பாரதிநகர், மெயின் தெரு,
கொருக்குப்பேட்டை, சென்னை–21.

முகாமில் சிறப்பு அம்சங்கள்

- கண் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் இலவச கண் பரிசோதனை செய்யப்படும்.
- கண் பரிசோதனைக்கு பிறகு கண் கண்ணாடி இலவசமாக முகாமில் வழங்கப்படும்.
- சர்க்கரை நோயாளிகளுக்கான விழித்திரை பரிசோதனை செய்யப்படும்.
- அறுவை சிகிச்சை வேண்டுவோர் முகாம் நாளன்று மருத்துவமனைக்கு செல்ல தயாராக வரவேண்டும். ஏற்கனவே உட்கொள்ளும் மருந்து மாத்திரைகளை மற்றும் ரேசன் அட்டை (அ) ஆதார் அட்டை (அ) வாக்காளர் அடையாள அட்டை நகல் மற்றும் மொபைல் எண் ஒன்றை உடன் கொண்டு வரவேண்டும்.

சிறப்பு அழைப்பாளர்கள் :

நேதாஜி திரு U.கணேசன் M.C. அவர்கள் (4–வது மண்டல குழு தலைவர்)

ஆய்வாளர் திரு M. ரவி அவர்கள் (ஆர்.கே. நகர் காவல் நிலையம், சட்டம்-ஒழுங்கு)

கவிஞர் M.சுல்தான், S.M.மீராமைதீன், K.கச்சி முகமது
S.அசன் அலி, S.காதர் உசேன், S.இக்பால், B.உஸ்மான் கான்

**ஹவ்வா கேட்டரிங் சர்வீசஸ்**
**ஹவ்வா நெட் சென்டர்**
**ஹவ்வா டிரேடர்ஸ்**

S.இக்பால், M.ரகுமான் B.Com., M.அப்துல் ரஹீம் D.M.E.

செல் : 9840885668, 9087261074, 7358426919

பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறும்படி அழைக்கின்றோம்.

அன்புடன் அழைக்கும்

PON TIMES TV pontimestv.in | வரலாறு நாளிதழ் | ISR MEDIA ONE

# இன்று

27-11-22



சதுர்த்தி விரதம்

சுபகிருது கார்த்திகை 11 | NOV - SUN ஞாயிறு | ஜமாஅத்துல் அவ்வல் 2 | வளர்பிறை 331 / 034

| நல்லநேரம் | கௌரி ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 7.45-8.45 | 10.45-11.45 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை: 3.15-4.15 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |

கரணம்: 10.30-12 சூரிய உதயம்: 6.15

இராசிபலன்: மேஷம் - மேன்மை, ரிஷபம் - நலம், மிதுனம் - சினம், கடகம் - வரவு, சிம்மம் - இரக்கம், கன்னி - நட்பு, துலாம் - எதிர்ப்பு, விருச்சி - லாபம், தனுசு - சிரமம், மகரம் - அசதி, கும்பம் - புகழ், மீனம் - பெருமை

www.mahacalendar.com

## சிந்திப்போம்.... செயல்படுவோம்






தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,925 | Rs.5,327 |

# பயங்கரவாதம் மனித குலத்துக்கு அச்சுறுத்தல்! வெளி விவகார துறை அமைச்சர் ஜெய்சங்கர் பேச்சு

புதுடெல்லி, நவ.27-

நாட்டில் மராட்டிய மாநிலம் மும்பையில் 2008-ம் ஆண்டு நவம்பர் 26ம் தேதி அடுத்தடுத்து பயங்கரவாததாக்குதல்கள் நடைபெற்றன. பாகிஸ்தானில் செயல்பட்டு வரும் லஷ்கர்- இ- தொய்பா பயங்கரவாத அமைப்பை சேர்ந்த பயங்கரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தினர். மும்பை பயங்கரவாத தாக்குதலில் வெளிநாட்டை சேர்ந்தவர்கள் உள்பட 166 பேர் உயிரிழந்தனர். தாக்குதல் நடத்திய 9 பயங்கரவாதிகள் பாதுகாப்புபடையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இந்த சம்பவம் அப்போது பரபரப்புடன் பேசப்பட்டது.



இந்நிலையில், மும்பை பயங்கரவாத தாக்குதலின் நினைவு தினம் நேற்று நவ.26 கடைப்பிடிக்கப்பட்டது. இதை முன்னிட்டு, மத்திய வெளி விவகாரத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறியதாவது:

மும்பை பயங்கரவாத தாக்குதல் நினைவு தினத்தில் அதில் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூர்வதில் உலக நாடுகள் இந்தியாவுடன் இன்று இணைந்துள்ளன. பயங்கரவாதம் மனித குலத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது. இந்த பயங்கரவாத செயல்களை திட்டமிட்டவர்கள் மற்றும் தாக்குதலை மேற்பார்வை செய்தவர்கள் நீதியின் முன் கொண்டு வரப்பட வேண்டும். பயங்கரவாதத்திற்கு இலக்காகி பாதிக்கப்பட்ட உலகம் முழுவதும் உள்ள ஒவ்வொரு நபருக்கும் கைம்மாறாக இதை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பி.எஸ்.எல்.வி., சி-54 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் சீறி பாய்ந்தது; இஸ்ரோ விஞ்ஞானிகள் ஆரவார மகிழ்ச்சி!

ஸ்ரீஹரிகோட்டா, நவ.27-

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து, பி.எஸ்.எல்.வி., சி-54 ராக்கெட் வெற்றிகரமாக நேற்று விண்ணில் பாய்ந்தது. இதனால் விஞ்ஞானிகள் ஆரவாரத்துடன் மகிழ்ச்சி அடைந்தனர்.



இதற்கான கவுன்ட்-டவுன் நேற்றுமுன்தினம் காலை 10.26 மணிக்கு தொடங்கிய நிலையில், நேற்று காலை 11.56 மணிக்கு கவுன்ட்-டவுனை நிறைவு செய்துவிட்டு ராக்கெட் விண்ணில் சீறிப்பாய்ந்தது. இந்த ராக்கெட் இந்தியாவின் 960 கிலோ எடை கொண்ட 'ஓசன்சாட்-03' (இ.ஓ.எஸ்-06) என்ற புவியை கண்காணிக்கும் செயற்கைக்கோள் மற்றும் 8 நானோ செயற்கைகோள்களை சுமந்து செல்கிறது.

அவற்றில் இந்தியாவின் ஐ.என்.எஸ். 2பி, பிக்சல் இந்தியா நிறுவனத்தின் ஆனந்த் செயற்கைக்கோள், தைபோல்ட் 1, தைபோல்ட் 2 மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த 4 ஆஸ்ட்ரோகாஸ்ட்-2 செயற்கைக்கோள்களும் அடங்கியுள்ளன. ராக்கெட்டும், செயற்கைக்கோள்களும் தொடர்ந்து தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

நேற்று 56-வது முறையாக பி.எஸ்.எல்.வி., ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது. அதோடு, இந்தாண்டில் 5-வது மற்றும் கடைசி முறையாக பி.எஸ்.எல்.வி., ராக்கெட் விண்ணில் ஏவப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# நீதிபதிகளின் சம்பளத்தை உயர்த்துவதால் நீதித்துறைக்கு நல்லவர்களை கொண்டு வந்து விட முடியாது: சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சந்திரசூட்

புதுடெல்லி, நவ.27-

"நீதிபதிகளின் சம்பளத்தை உயர்த்துவதால் நீதித்துறைக்கு நல்லவர்களைக் கொண்டு வந்து விட முடியாது," என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தெரிவித்துள்ளார்.



அரசியலமைப்பு நாள் கொண்டாட்டத்தை ஒட்டி டெல்லியில் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் பார் கூட்டமைப்பு சார்பில் நடந்த விழாவில் பங்கேற்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் பேசியதாவது:

ஜனநாயகத்தில் எந்த ஒரு அமைப்பும் பூரணமானது அல்லது. அதற்கு கொலீஜியம் முறை மட்டும் விதிவிலக்கா என்ன? ஆனால், கருத்து வேறுபாடுகளோ, சிக்கல்களோ ஏற்படும்போது நாம் அந்த அமைப்புக்கு உட்பட்டே அதற்கு தீர்வு காண்பது அவசியம்.

நீதிபதிகள் அரசியல் சாசனத்தை அமல்படுத்தும் நேர்மையான வீரர்கள். கொலீஜியம் முறையில் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதாலோ அல்லது நீதிபதிகளின் சம்பளத்தை உயர்த்துவதாலோ நீதித்துறைக்கு நல்லவர்களைக் கொண்டுவந்து விட முடியாது. நீங்கள் எவ்வளவு தான் உயர்ந்த சம்பளத்தை நீதிபதிகளுக்குக் கொடுத்தாலும் மூத்த பிரபல வழக்கறிஞர்கள் ஒருநாள் சம்பாத்தியத்தில் அது ஒரு சிறு பகுதியாகத் தான் இருக்கும்.

அதையும் மீறி ஒரு வழக்கறிஞர் நீதிபதியாவது என்பது மனசாட்சியின் குரலுடன் இயைந்து போவது. மக்கள் சேவையில் அவருக்கு உள்ள அர்ப்பணிப்பு. கொலீஜியம் சர்ச்சைக்கான விடையெல்லாம் நாம் இளைஞர்களுக்கு எப்படி முன்மாதிரியாக திகழ்ந்து அவர்களின் நீதிபதி கனவிற்கு வித்திடுகிறோம் என்பதில் தான் இருக்கிறது. நீதிபதிகளின் ஓய்வுக் காலத்திற்குப் பின்னரும் கூட அவர்களிடமிருந்து பிரித்து எடுக்க முடியாத ஒன்று மனநிறைவு.

கடந்த 2020ம் ஆண்டு மே மாதம் நான் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு வீட்டிலிருந்தேன். அப்போது எனக்கொரு மின்னஞ்சல் வந்தது. அதில், இந்திய கடற்படையின் பெண் கமாண்டர்கள், "நீங்கள் எங்களை நேரில் பார்த்தது கிடையாது. ஆனால், நீங்கள் எங்களுக்காக செய்த நியாத்திற்காக உங்கள் நலன் வேண்டி பிரார்த்திக்கிறோம்," என்று குறிப்பிட்டிருந்தனர். அதுதான் ஒரு நீதிபதிக்குக் கிடைக்கக் கூட பெரிய நிம்மதி.

இவ்வாறு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் பேசினார்.




# ரேஷன் பொருட்கள் கடத்தப்படுவதை தடுக்க தென்காசி ஆட்சியர் அலுவலகத்தில் கூட்டம்



தென்காசி,நவ.27-

தமிழகத்திலிருந்து அண்டை மாநிலங்களுக்கு பொது விநியோகத் திட்ட பொருட்கள் கடத்தப்படுவது தொடர்பாக தமிழ்நாடு மற்றும் கேரளா மாநில எல்லையில் அமைந்துள்ள தென்காசி மாவட்டத்தில் இரு மாநிலங்களின் குடிமை பொருள் வழங்கல் அதிகாரிகள் மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத்துறை உள்ளிட்ட காவல்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பு கூட்டம் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில், தென்காசி மாவட்ட வருவாய் அலுவலர் தலைமை வகித்தார். தமிழகம் தரப்பிலிருந்து தென்காசி மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயினுலாப்தின், மாவட்ட வழங்கல் அலுவலர் சுதா, திருநெல்வேலி உட்கோட்டம் குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை சார்பு ஆய்வாளர் ஜெயக்குமார், புளியரை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் முத்துகிருஷ்ணன், ரயில்வே போலீஸ் சார்பு ஆய்வாளர் மாரியப்பன் மற்றும் கேரளா மாநில தரப்பில் இருந்து புனலூர் வட்ட வழங்கல் அலுவலர் பைசல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், இரு மாநில அதிகாரிகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு பொது விநியோகத் திட்ட பொருட்கள் கடத்தப்படுவதை தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.



பொது சுகாதாரத்துறை நூற்றாண்டு விழாவை, அரியலூர் மாவட்டத்தில் சிறப்பாக நடத்திய, மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை துணை இயக்குனர் கீதா ராணிக்கு பாராட்டு தெரிவித்து, அரியலூரில் நடைபெற்ற விழாவில், ஜெயங்கொண்டம் வட்டார சுகாதார செவிலியர்கள் வாழ்த்து மடல் வழங்கி மகிழ்ந்தனர்.

# பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தின விழிப்புணர்வு பேரணி: ஆட்சியர் துவக்கிவைப்பு

கள்ளக்குறிச்சி, நவ.27-

கள்ளக்குறிச்சி மாவட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைகள் துறையின் சார்பில், சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, கல்லூரி மாணவிகளின் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் தொடர்பான விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன்குமார், போலீஸ் எஸ்.பி., பகலவன் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.



கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைகள் துறை சார்பில் தமிழக அரசு வழங்கும் அனைத்து நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது. பெண்களுக்கு எதிரான ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, கல்லூரி மாணவிகள், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பெண்களின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வாசகங்களை எழுப்பியவாறு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கி, கள்ளக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகம் வரை பேரணி நடைபெற்றது.

இப்பேரணியில் குழந்தை பாதுபாப்புக்கு 1098, பெண்கள் பாதுகாப்புக்கு 181, பெண் குழந்தையை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம், பெண்கள் பாதுகாப்பு நம்ம காவலன் செயலி, பணியிடத்தில் பெண்களின் பாதுகாப்பிற்கு விசாகா அமைப்பு, சமூக சீண்டலை எதிர்த்து நில், பெண்ணென்று நிமிர்ந்து நில் உள்ளிட்ட விழிப்புணர்வு வாசகங்களை எழுப்பியவாறு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் சத்தியநாராயணன், மாவட்ட சமூக நல அலவலர் தீபிகா, கல்லூரி மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# புதுகை மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகள் குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் ஆய்வு

**புதுக்கோட்டை, நவ.27-**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் குறித்தும், ஜெ.ஜெ.எம். திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் குறித்தும், மிஷன் இயக்குநர் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தட்சிணாமூர்த்தி, அலுவலர்கள் ஆய்வு கூட்டத்தில் பங்கேற்ற பின் தெரிவித்ததாவது;



புதுக்கோட்டை நகராட்சியில் பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப நாள்தோறும் தேவைப்படும் 40 மில்லியன் லிட்டர் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், மணல்மேடு கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றில் ரூ.670 கோடி மதிப்பீட்டில் புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் புதுக்கோட்டை நகராட்சி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் உள்ள குடிநீர் குழாய்களை சீர்ப்படுத்தும் வகையில் ரூ.75.06 கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசு அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, அரிமளம், ஆவுடையார்கோவில், புதுக்கோட்டை மற்றும் மணமேல்குடி ஒன்றியங்களைச் சார்ந்த 754 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் வகையில் ரூ.756.56 கோடி மதிப்பீட்டிலும், விராலிமலை, அன்னவாசல், குன்றாண்டார்கோவில், பொன்னமராவதி மற்றும் திருமயம் ஒன்றியங்களைச் சேர்ந்த 1094 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் வகையில் ரூ.550.43 கோடி மதிப்பீட்டிலும் மூன்றாம் நபர் கலந்தாலோசகர் மூலம் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

இப்பணிகள் அனைத்தும் நிறைவடைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் சூழ்நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்ய இயலும். இவ்வாறு தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.

கூட்டத்தில், குடிநீர் வடிகால் வாரிய தலைமைப் பொறியாளர் முரளி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, மேற்பார்வை பொறியாளர் மாதவன், நிர்வாகப் பொறியாளர்கள் அயினான், அய்யாசாமி, எழிலரசன், வசந்தி, உதவி நிர்வாகப் பொறியாளர்கள் கருப்பையா, ராஜகோபால், நிர்வாகப் பொறியாளர் நிர்மலா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஸ்ருதி, நகராட்சி ஆணையர் நாகராஜன், நகராட்சிப் பொறியாளர் சேகரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மின் இணைப்புடன் ஆதார் எண்ணை இணைக்க குறைந்தபட்சம் 6 மாதம் வரை அவகாசம் வேண்டும்; மின்நுகர்வோர் கோரிக்கை

சென்னை, நவ.27-

"மின் இணைப்புடன் ஆதார் எண்ணை இணைக்க குறைந்தபட்சம் 6 மாதங்கள் வரை அவகாசம் வழங்க வேண்டும்," என்று மின்நுகர்வோர் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

நுகர்வோரின் மின் இணைப்புடன் ஆதார் எண்ணை இணைக்குமாறு மின்வாரியம் தெரிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து, மின்நுகர்வோர் பலரும் மின்வாரிய இணையதளத்துக்கு சென்று, தங்கள் மின்இணைப்புடன், ஆதார் எண்ணை இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனால், மின்வாரிய இணையதளத்தின் சர்வர் முடங்கியது. இதன் காரணமாக ஆதார் எண்ணை இணைக்க முடியாத நிலை ஏற்பட்டது. அத்துடன், மின்கட்டணத்தையும் கட்ட முடியாததால், பலரும் சிரமத்துக்கு ஆளாகினர்.



இது தொடர்பாக நுகர்வோர் தரப்பில் இருந்து ஏராளமான புகார்கள் வந்ததை அடுத்து, நவ.30ம் தேதிக்குள் மின்கட்டணம் செலுத்த வேண்டியவர்கள் மின்கட்டணம் செலுத்த 2 நாட்கள் கூடுதல் அவகாசம் வழங்கி மின்வாரியம் அறிவித்துள்ளது. எனினும், ஏராளமானோர் தங்கள் மின்இணைப்புடன் ஆதார் எண்ணை இணைக்க இணையதளம் மூலமாகவும், மின்வாரிய அலுவலக கவுன்டர்களிலும் நேற்று குவிந்தனர். இதனால், மின்வாரியத்தின் இணையதள சேவை முடங்கியது.

இது குறித்து மின்நுகர்வோர் தெரிவித்ததாவது: மின்இணைப்புடன் ஆதார் எண்ணை இணைக்க ஆன்-லைனில் கடந்த 4 நாட்களாக முயன்றும், இணைக்க முடியவில்லை. நேரில் சென்று விண்ணப்பிக்கலாம் என மின்வாரிய அலுவலகத்துக்கு வந்தால், இணையதள சர்வர் டவுன் ஆகிவிட்டது என்று கூறி, சிறிது நேரம் கழித்து வருமாறு திருப்பி அனுப்பி அலைக்கழிக்கின்றனர். இணைப்பு பணிக்கு சராசரியாக ஒரு நபருக்கு குறைந்தபட்சம் அரை மணி முதல் முக்கால் மணி வரை ஆகிறது. இதனால், மணிக்கணக்கில் காத்திருக்க நேரிடுகிறது.

அவசர அவசரமாக ஆதார் எண்ணை இணைப்பதால் நுகர்வோருக்கு பல்வேறு சந்தேகம் எழுகிறது. ஆதார் எண்ணை இணைத்தால் 100 யூனிட் இலவச மின்சாரம், 500 யூனிட் வரையிலான மானியம் ரத்தாகுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. எனவே, இதற்கு குறைந்தபட்சம் 6 மாதங்கள் வரை அவகாசம் வழங்க வேண்டும். இவ்வாறு மின்நுகர்வோர் தெரிவித்தனர்.

கோவையில் மின்சாரத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி கூறியதாவது: மின்கட்டணம் செலுத்த ஆதார்கார்டு இணைப்பு குறித்து அ.தி.மு.க., பா.ஜ.க.,வினர் அவதூறு செய்திகளை பரப்பி வருகின்றனர். ஆதார் எண் இல்லை என்றாலும் இப்போது கட்டணம் செலுத்தலாம். ஆனால், ஆதார் எண்ணை கட்டாயம் இணைக்க வேண்டும். பெயர் மாற்றம் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. மின் துறையில் சீர்திருத்தம் செய்ய ஆதார் இணைப்பு அவசியம். இவ்வாறு செந்தில்பாலாஜி கூறினார்.

# அன்னவாசல் ஒன்றிய ஊராட்சி செயலாளர்கள் சங்க நிர்வாகிகள் அனைவரும் போட்டியின்றி தேர்வு

அன்னவாசல், நவ.27-

சித்தன்னவாசலில் அன்னவாசல் ஒன்றிய ஊராட்சி செயலாளர்கள் சங்க நிர்வாகிகள் ஒன்றிய தேர்தல் நடைபெற்றது

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஊராட்சிஒன்றிய, ஊராட்சி செயலாளர்கள் சங்கத்தின் ஒன்றிய தேர்தல் சித்தன்னவாசல் பூங்கா வளாகத்தில் தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்க மாநில பொதுச்செயலாளர் மணிராஜ் தலைமையில் நடைபெற்றது.



இதில், அலுவலர்கள் அந்தோணிசாமி, ராசு, வடிவேல் முன்னிலையில், ஊராட்சி செயலாளர்கள் சங்க ஒன்றிய தேர்தல் நடைபெற்றது.

தேர்தலில் ஒன்றிய தலைவராக இருந்திரப்பட்டி ஊராட்சி செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய செயலாளராக சத்தியமங்கம் ஊராட்சி செயலாளர் பாலசுப்பிரமணியன்,

ஒன்றிய பொருளாளராக வெள்ளாஞ்சார் ஊராட்சி செயலாளர் ஆரோக்கியசாமி, ஒன்றிய கவுரவத் தலைவராக தச்சம்பட்டி ஊராட்சி செயலாளர் ஆறுமுகம், ஒன்றிய துணைத்தலைவர் மதியநல்லூர் ஊராட்சி செயலாளர் வெள்ளைச்சாமி, ஒன்றிய துணைச் செயலாளர் புதூர் ஊராட்சி செயலாளர் கருப்பையா, ஒன்றிய இணை செயலாளர் வெள்ளனூர் ஊராட்சி செயலாளர் முருகேசன், ஒன்றிய செய்தி தொடர்பாளர் கட்டகுடி ஊராட்சி செயலாளர் ஆறுமுகம் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அணித்தலைவர்கள் அனைவரையும் ஏகமனதாக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

புதிதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளுக்கு தேர்தல் அலுவலர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். ஒன்றிய சங்க முன்னாள் தலைவர் சக்திவேல் நன்றி கூறினார்.

# சீர்காழியில் 1,000 அரச மரக்கன்று நடும் விழா தருமபுரம் ஆதீனம் தொடக்கி வைத்தார்



சீர்காழி, நவ.27–
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே சட்டநாதபுரம் உப்பனாற்றங்கரையின் இருபுறமும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், மார்கோனி பவுண்டேஷன் சார்பில், 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு 1,000 அரசமரக் கன்றுகள் நடுவிழா நடைபெற்றது.

தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியா சுவாமிகள் கலந்துகொண்டு மரக்கன்றுகள் நடும் விழாவை தொடக்கி வைத்தார். விழாவில், சீர்காழி எம்.எல்.ஏ., பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ம.தி.மு.க., செயலாளர் மார்கோனி, இந்து முன்னணி மாவட்ட தலைவர் சரண்ராஜ், பா.ம.க., நிர்வாகிகள் செந்தில்குமார், முருகவேல், ஆதிசங்கர், பாலகிருஷ்ணன், விஷ்வ இந்து பரிஷத் மாவட்ட நிர்வாகி செந்தில், மருந்தாளுநர் முரளி, ஒன்றிய கவுன்சிலர்கள் ராஜேஷ், கனேசன், ஆசிரியர் கோவி நடராஜன், ஊராட்சி தலைவர் தட்சிணாமூர்த்தி மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகிகள் டெம்பிள் டவுன் ரோட்டரி சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



▶ புதுவை ஜிப்மர் மருத்துவமனை சிறப்பு மருத்துவர்கள் குழு மாதம் இரு முறை சனிக்கிழமை காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு வருகை புரிந்து காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நோயாளிகளுக்கு சிறுநீரகம் சம்பந்தமான பிரச்சனைகளுக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்கி வருகின்றனர். அதேபோல் நேற்றும் சிகிச்சை அளித்தனர். இதில், ஏராளமானோர் பங்கேற்று பயன்பெற்றனர்.

# டிச.,6 பாபர் மசூதி இடிப்பு தினம் எதிரொலி சீர்காழியில் விடுதிகளுக்கு கடும் கட்டுப்பாடுகள் !



சீர்காழி, நவ.27
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி காவல் நிலைய உட்கோட்டத்திற்கு உட்பட்ட விடுதி மற்றும் ஹோட்டல் உரிமையாளர்களுடன் காவல்துறையினர் கலந்தாய்வு கூட்டம் நடத்தினர். சீர்காழி காவல்துறை கண்காணிப்பாளர் லாமேக் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சீர்காழி காவல் ஆய்வாளர் பாலச்சந்தர் கலந்து கொண்டு, பல்வேறு ஆலோசனை, அறிவுகளை வழங்கினார்.

குறிப்பாக, தமிழகத்தில் தீவிரவாத அமைப்புகளால் தாக்குதலுக்கு ஆளாக வாய்ப்புள்ளதாக தகவல்கள் வந்துள்ளதாகவும், டிசம்பர் 6 பாபர் மசூதி இடிப்பு தினம் அனுசரிக்கப்படஉள்ளதாலும், அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறாத வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விடுதி உரிமையாளர்கள் தங்கள் விடுதிகளுக்கு வரும் நபர்களின் முழு விவரங்களை சேகரிக்க வேண்டும். சந்தேகப்படும் படியான நபர்கள் குறித்த தகவலை உடனடியாக அருகிலுள்ள காவல் நிலையத்தில் தெரிவிக்க வேண்டும். இரண்டு நாட்களுக்கு மேல் யாரையும் விடுதியில் தங்க அனுமதிக்கக் கூடாது. கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு அனைத்தையும் பதிவு செய்து அந்த காட்சிகளை குறைந்தது 20 நாட்களுக்காவது பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும் உள்ளிட்ட நடைமுறைகளை தீவிரமாக பின்பற்ற வேண்டும் என போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கு விடுதி உரிமையாளர்கள் முழு சம்மதம் தெரிவித்து சென்றனர்.

# ரத்தினகிரியில் திருக்குறள் பரிசளிப்பு விழா



ராணிப்பேட்டை, நவ.27–
ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா தாலுகா, ரத்தனகிரி பாலமுருகன் கோயிலில் உலக திருக்குறள் பேரவை சார்பில் திருவள்ளுவர் விழா முன்னிட்டு, திருக்குறள் போட்டிகளில் வெற்றி பெற்ற 15 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா நடந்தது.

விழாவில், பாலமுருகனடிமை சுவாமிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர் பாஸ்கர பாண்டியன் தலைமை வகித்தனர். எம்.எல்.ஏ.,க்கள் வேலூர் கார்த்திகேயன், ஆற்காடு ஈஸ்வரப்பன், கவிஞர் ஜோதி முன்னிலை வகித்தனர். இதில் துறை சார்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு அமைச்சர் சந்திர பிரியங்கா மரியாதை



காரைக்கால், நவ.27–
இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட நவம்பர் 26ம் தேதியான நேற்று இந்திய அரசியலமைப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது.

இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் வரைவுக் குழுவின் தலைவராக செயல்பட்ட அம்பேத்கரை கவுரவிக்கும் விதமாக காரைக்கால் கலெக்டர் அலுவலகம் எதிரில் அமைந்துள்ள அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் முகமது மன்சூர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் வடக்கு மற்றும் அரசு அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# காரைக்காலில் மண்புழு உரம் தயாரிப்பு செயல் விளக்கம் பயிற்சியில் 15 விவசாயிகளுக்கு மண்புழு உரப்பை வழங்கல்



காரைக்கால்,நவ.27–
புதுச்சேரி மாநிலம் காரைக்கால் அடுத்த மாதூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம், மத்திய வறண்ட நில வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தேசிய பருவமழை மாற்றத்திற்கு உகந்த மீள் தன்மையுள்ள வேளாண் திட்டத்தின் கீழ் பயிற்சிகள் மற்றும் செயல்பாடுகள் பேட்டை, அத்திப்படுகை மற்றும் நெய்வாச்சேரி கிராமங்களில் நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக மேற்கண்ட கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்பு குறித்த பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலைய முதல்வர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெயசங்கர் கூறியதாவது:

விவசாயிகள் அனைவரும் ரசாயன உரங்களை அதிகளவு பயன்படுத்துவதால் மண்ணில் வெப்பம் அதிகரித்து மண்ணில் உள்ள நுண்ணுயிரிகள் இறக்கும் அபாயம் உள்ளது. ஆகவே, விவசாயிகள் அனைவரும் மண்புழு உரம், மத்திய தொழு உரங்கள், உயிர் உரங்கள் மற்றும் பசும்பால் உரங்களை பயன்படுத்தி மண்ணின் உயிர் தன்மை பாதுகாக்கப்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தொழில்நுட்ப உரையாற்றிய வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்) அரவிந்த் மண்புழு உரம் அமைய உள்ள இடம் தேர்வு செய்தல், கொட்டகை அமைத்தல், வேளாண் கழிவுகளை மக்க வைத்தல், மண்புழுவில் உள்ள ரகங்கள், மண்புழு உரத்தில் உள்ள சத்துக்கள் மற்றும் பயன்களைப் பற்றி பயிற்சி அளித்தார்.

பயிற்சியில் விவசாயிகள் அனைவரும் ஆர்வத்தோடு மண்புழு உரம் தயாரிப்பது பற்றிய செயல் விளக்கத்தை செய்து பார்த்தனர். இப்பயிற்சியில் 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர். 15 விவசாயிகளுக்கு மண்புழு தயாரிப்பதற்கான மண்புழு உரப்பை வழங்கப்பட்டது.



▶ சென்னை தண்டையார்பேட்டை நேதாஜி நகர் 2வது குறுக்கு தெரு, 3வது தெரு பகுதிகளில் மழைக்காலங்களில் மழை நீர் கால்வாயில் செல்லாமல் தடைபட்டிருந்தது. இதை மண்டல குழு தலைவர் நேதாஜி கனேசன் ஆய்வு செய்து சென்னை மாநகராட்சி அதிகாரிகளை தொடர்பு கொண்டு மழை நீர் கால்வாயில் செல்வதற்கான பணியினை தொடங்கி வைத்தார். அப்போது, சென்னை மாநகராட்சி அரசு அதிகாரிகள், பொதுமக்கள் உடனிருந்தனர்.

# சென்னை 51வது வார்டு மாமன்ற உறுப்பினர் நிரஞ்சனா ஜெகதீஷ் ஆ:.பிஸ் திறப்பு நிகழ்ச்சி



சென்னை, நவ.27–
வடசென்னை மாவட்ட உதயநிதி ஸ்டாலின் ரசிகர் மன்றம் மாவட்ட தலைவர் ஜெகதீஷ் தலைமையில் சென்னை ராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மணிகண்டன் தெருவில் 51வது வார்டு மாமன்ற உறுப்பினர் நிரஞ்சனா ஜெகதீஷ் அலுவலகம் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது

இதில், சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் இளைய அருணா மற்றும் ராயபுரம் மண்டல குழு தலைவர் ஸ்ரீராமலு கலந்து கொண்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தை ரிப்பன் வெட்டி குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்தனர்.

மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு பேட், மாற்று திறனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிள், பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் 1,000க்கும் மேற்பட்ட பெண்களுக்கு புடவைகள், பிரியாணி வழங்கினர்.

நிகழ்ச்சியில், வட்ட செயலாளர் கண்ணன், மாணவர் அணி துணை அமைப்பாளர் மகேஷ், மாமன்ற உறுப்பினர்கள் வேளாங்கண்ணி, குமாரி நாகராஜ், மணிமேகலை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வேலூர் எஸ்.பி., ராஜேஷ் கண்ணன் தலைமையில் காவலர் எழுத்து தேர்வுக்கான கண்காணிப்பு கூட்டம்





வேலூர், நவ.27–
வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் இரண்டாம் நிலை காவலர் தீயணைப்பாளர், சிறை காவலர் பணியிடங்களுக்கான எழுத்து தேர்வு இன்று 27ம் தேதி நடைபெறவுள்ளது. வேலூர் மாவட்டத்தில் 15 தேர்வு மையங்களில் ஆண்கள் 12ஆயிரத்து 799 பேர் மற்றும் பெண்கள் 2,192 பேர் என மொத்தம் 14 ஆயிரத்து 991 பேர் தேர்வு எழுத பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக காவல்துறையினர் செய்ய வேண்டிய கண்காணிப்பு பணிகள் குறித்து வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜேஷ் கண்ணன் தலைமையில் காட்பாடியில் உள்ள விஐ.டி., கல்லூரியில் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் காவலர் எழுத்து தேர்வு குறித்து காவல்துறையினர் மற்றும் காவல்துறை அமைச்சுப்பணியாளர்கள் ஒவ்வொருவரும் என்னென்ன பணிகள்?, எவ்வாறு மேற்கொள்ள வேண்டும்? என்று அறிவுரைகளை வழங்கினார்.

இந்த எழுத்துத் தேர்வுக்கு காமினி மேற்பார்வையில் வேலூர் காவல் கண்காணிப்பாளர், தேர்வுகுழு உறுப்பினருமான ராஜேஷ் கண்ணன் தலைமையில், துணை காவல் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்கள் உட்பட 1,200 போலீசார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த அறிவுரை கூட்டத்தில் தேர்வுக்குழு துணை உறுப்பினர்கள் பாஸ்கரன், கனகேசன், யுவபிரியா மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் குணசேகரன், சேகர் உட்பட காவல்துறை அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

# ஒலி அறிவிப்பு திட்டம்; பேருந்தில் பயணித்த உதயநிதி





சென்னை, நவ.27–
சென்னை மாநகர பேருந்துகளில் பேருந்து நிறுத்தம் ஒலி அறிவிப்பு திட்டத்தை துவக்கி வைத்த உதயநிதி ஸ்டாலின் எம்.எல்.ஏ., பேருந்தில் பயணித்து மகிழ்ந்தார்.

மின்சார ரயில்களை போலவே, பேருந்துகளிலும் நிறுத்தம் பற்றிய ஒலி அறிவிப்பானது தமிழ், ஆங்கிலத்தில் அடுத்து வரக்கூடிய நிறுத்தம் குறித்து பயணிகளுக்கு அறிவிக்கப்படும்

இந்த பேருந்தின் ஒலி அறிவிப்பு திட்டத்தை துவங்கி உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார். அதன்பின், சென்னை பல்லவன் சாலையில் இருந்து புறப்பட்டு பாரிஸ் கார்னர் வழியாக குறளகம், உயர்நீதிமன்றம், பிராட்வே பேருந்து நிலையம் வழியாக சென்று தலைமை செயலகம் வழியாக பேருந்து தலைமை செயலகம் தாண்டி மெரினா, அறிஞர் அண்ணா சதுக்கம் பேருந்து நிறுத்தம் வழியாக உதயநிதி ஸ்டாலின் பேருந்தில் பயணித்து மகிழ்ந்தார்.



▶ தமிழக மற்றும் புதுச்சேரி காவல் உதவி ஆய்வாளர்களின் 47ம் ஆண்டு குடும்ப சங்கம விழா நடைபெற்றது. விழாவில் பொருளாளர் முன்னாள் கூடுதல் துணை கமிஷனர் தயாநிதியின் 10 வயது பேத்தி பிரபருஷனா ஸ்ரீநிவாஸ் அழகான நீண்ட ஆங்கில கதைகளை சொல்லி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். அவரின் தங்கை நிரஞ்சனா ஸ்ரீநிவாஸ் பொன்னியின் செல்வன் திரைப்பட பாடலை பாடி அனைவரையும் மகிழ வைத்தார். சிறுவன் முகுந்தின் நடனம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சுமார் 200க்கும் மேற்பட்ட காவல்துறை அதிகாரிகள் குடும்பத்தினருடன் பங்கேற்றனர்.

# காஞ்சிபுரம் ஸ்ரீ நவ துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஐயப்ப மலர் பூஜை, கற்பூர ஜோதி தரிசன பூஜை



காஞ்சிபுரம், நவ.27–
காஞ்சிபுரம் சர்வோதயா நகரில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ நவ துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஸ்ரீ நவ துர்க்கை சுபரிமலை பாதயாத்திரை சபா சார்பில் ஐயப்ப மலர் பூஜை மற்றும் கற்பூர ஜோதி தரிசன பூஜை நடைபெற்றது.

சித்பாவனந்த குருசாமி, பாண்டுரங்க குருசாமி தலைமையில் நடைபெற்ற பூஜையில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட 18ம் படியின் மீது ஐயப்ப சுவாமி அமர்ந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பூஜைக்கான ஏற்பாடுகளை காஞ்சிபுரம் அம்மன் பில்டர்ஸ் உரிமையாளர்கள் தாஸ் மற்றும் டில்லி பாபு செய்திருந்தனர். பூஜையில் கலந்து கொண்ட ஐயப்ப பக்தர்கள் மற்றும் மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இதில், காஞ்சிபுரம் திமு.க., தலைமை செயற்குழு உறுப்பினர் சுகுமார், தி.மு.க., பகுதி செயலாளர் தசரதன் மற்றும் அப்பகுதியில் உள்ள ஐயப்ப பக்தர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஆலங்குடியில் நாளை மின்சாரம் இருக்காது

ஆலங்குடி, நவ.27–
ஆலங்குடி அருகேயுள்ள பாச்சிக்கோட்டை, வடகாடு ஆதியதுணைமின் நிலையங்களில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது.

ஆகையால், இங்கிருந்து மின்வினியோகம் செய்யப்படும் ஆலங்குடி, பாச்சிக்கோட்டை, களபம், வெட்டன்விடுதி, ஆலங்காடு, அரசடிப்பட்டி, கே.ராசியமங்கலம், மாங்கோட்டை, பாப்பான்விடுதி, செம்பட்டிவிடுதி, கோவிலூர், வடகாடு, மாங்காடு, கொத்தமங்கலம்.

புள்ளான்விடுதி, அலங்காடு, பள்ளத்திவிடுதி, பசுவயல், அரையப்பட்டி, கீழாத்தூர், சூரன்விடுதி ஆகிய பகுதிகளில் நாளை திங்கட்கிழமை நவ.28ம் தேதி காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை மின்வினியோகம் இருக்காது.

இவ்வாறு மின்வாரிய உதவி செயற்பொறியாளர் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

# ஜல்–ஜீவன் மிஷன் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு முதல் நிலை விருது



கள்ளக்குறிச்சி, நவ.27–
கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கிராம பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்புகள் மத்திய அரசின் ஜல்-ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது. 2024-ம் ஆண்டிற்குள் கிராம பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் போதிய அளவிலான (பி.ஐ.எஸ்.:10500) தரத்துடன் கூடிய நீடித்த நிலையான குடிநீர் வழங்கிடும் நோக்கில் ஜல்-ஜீவன் மிஷன் திட்டம் செயல்ப்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், 2022ம் ஆண்டு அக்டோபர் வரை 1 லட்சத்து 33 ஆயிரத்து 694 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுதொடர்ந்து திட்டப்பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், இந்திய அளவில் ஜல்-ஜீவன் மிஷன் திட்டத்தில் சிறப்பாக செயல்பட்டமைக்கு பிரதமர் மோடி, கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு முதல் நிலை விருது வழங்கி கௌரவித்துள்ளார். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன்குமார் தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஜல்-ஜீவன் மிஷன் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மணி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ரத்தினமாலா, குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் தமிழ்செல்வன் ஆகியோருக்கு ஆட்சியர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# தேர்தல் விழிப்புணர்வு சுவரொட்டி தயாரிப்பு போட்டி: மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கல்



ஆவுடையார்கோயில், நவ.27–
ஆவுடையார்கோயில் அரசு மேல்நிலைப் பள்ளியில் தேர்தல் விழிப்புணர்வுசுவரொட்டி தயாரிப்பு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

தமிழக தேர்தல் ஆணையத்தின் ஆணைக்கிணங்க வாக்களிப்பதின் அவசியத்தை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சுவரொட்டி தயாரிக்கும் போட்டி ஆவுடையார் கோவில் வருவாய் துறை சார்பில் (தேர்தல் பிரிவு) கடந்த மாதம் நடைபெற்றது.

இதில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில், முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு முறையே ரூ.500, ரூ.200, ரூ.100 மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பள்ளி தலைமையாசிரியர் தாமரைச்செல்வன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் (தேர்தல் பிரிவு) கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்கள். உதவி தலைமையாசிரியர் ஸ்டாலின் உள்ளிட்ட ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



▶ புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே மன்னகுடி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.37 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ள பணிகளை சுற்றுச்சூழல் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் மெய்யநாதன் தொடங்கி வைத்து பேசினார்.

# இலவச மருத்துவ ஆலோசனை முகாம் மாஜி அமைச்சர் விஜயபாஸ்கர் ஏற்பாடு



விராலிமலை, நவ.27–

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் சி.வி.பி., அறக்கட்டளை மற்றும் கே.எம்.சி., பல்நோக்கு மருத்துவமனை நடத்திய இலவச மருத்துவ ஆலோசனை முகாம் விராலிமலை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. முகாமை முன்னாள் அமைச்சரும், விராலிமலை எம்.எல்.ஏ., வுமான விஜயபாஸ்கர் துவக்கி வைத்தார்.

இம்முகாமில், ரத்த அழுத்த பரிசோதனை, சர்க்கரை அளவு பரிசோதனை, இ.சி.ஜி., மார்பக புற்றுநோய் பரிசோதனை, கர்ப்பப்பை பரிசோதனை, பொது மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

பரிசோதனை முடிந்து அறுவை சிகிச்சை தேவைப்படுவோர் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்டு முழுவதும் இலவசமாக மருத்துவம் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது. முகாமில் 100க்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்று பயன்பெற்றனர்.

முகாமில், அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர்கள் பழனியாண்டி, நாகராஜன், மாவட்ட கவுன்சிலர் சிவசாமி, ஒன்றிய கவுன்சிலர்கள் மணிகண்டன், ஐயப்பன், சுப்ரமணியன், கூட்டுறவு சங்க தலைவர் அய்யப்பன், ஊராட்சி மன்றதலைவர் முருகேசன், துணை தலைவர் தீபன் சக்ரவர்த்தி, ஒன்றிய நிர்வாகிகள் சுதாகர், வேல்மணி, பிரபாகரன், ராஜா, ராஜேஷ் கண்ணன், முனியன், சுரேஷ், மணிக்குமார், மாமுண்டி, ரமணி உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகளும், கே.எம்.சி., மருத்துவ நிர்வாக ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

# பிரண்ட்ஸ் ஆப் ஃபயர் தன்னார்வலர்களுக்கு உ.பேட்டை தீயணைப்பு நிலையத்தில் பயிற்சி





கள்ளக்குறிச்சி, நவ.27–

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தீயணைப்பு நிலையத்தில், பிரெண்ட்ஸ் ஆப் ஃபயர், தன்னார்வ இளைஞர்கள் 15 பேருக்கு, தீ விபத்து மற்றும் விபத்து நேரத்தில் தீயணைப்பு வீரர்களுக்கு உதவியாக பணியாற்றும் வகையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர், திருநாவலூர் ஆகிய தீயணைப்பு நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து சுமார் 15 தன்னார்வ இளைஞர்கள் ஃபயர் ஆப் பிரண்ட்ஸாக, தீயணைப்புத் துறையில் பணியாற்ற விருப்பம் தெரிவித்திருந்தனர்.

நேற்று அவர்களுக்கு உளுந்தூர்பேட்டை தீயணைப்பு நிலைய அலுவலர் சக்கரவர்த்தி மற்றும் திருக்கோவிலூர், திருநாவலூர் தீயணைப்பு நிலைய அலுவலர் ரமேஷ் ஆகியோர் உளுந்தூர்பேட்டை தீயணைப்பு நிலையத்தில், தன்னார்வ இளைஞர்களுக்கு விபத்து காலங்களில் மக்களை எப்படி காப்பாற்றுவது?, முதலுதவி செய்வது உள்ளிட்ட செயல் விளக்க பயிற்சிகளை அளித்தனர்.

இந்நிகழ்வின் போது தீயணைப்பு வீரர்கள் பரந்தாமன், அசோக்குமார், சக்திவேல், ரமேஷ், லியாகத்அலி ஆகியோர் உடனிருந்தனர்.

# நெடுவாசல் ஹைட்ரோ கார்பன் போராட்டக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் உயிரிழப்பு: உடல், கண்கள் தானம்



ஆலங்குடி,நவ.27–

ஆலங்குடி அருகே நெடுவாசல் ஹைட்ரோகார்பன் போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளராக இருந்த வேலு ஆசிரியர் உடல்நலக் குறைவால் உயிரிழந்த நிலையில், அவரது விருப்பப்படி அவரது உடல், கண்கள் தானமாக வழங்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா நெடுவாசல் கிராமத்தில் கடந்த 2017 பிப்ரவரி 15ம் தேதி ஹைட்ரோ கார்பன் திட்டத்தை செயல்படுத்த போவதாக மத்திய அரசு ஒப்பந்த அறிவிப்பு விடுத்தது. இதற்கு எதிராக நெடுவாசல் பகுதி மக்கள் 200 நாட்கள் அடுத்தடுத்த போராட்டங்களில் ஈடுபட்டனர்.

நெடுவாசல் கிராம மக்கள் போராட்டம் தொடங்கிய போது போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளராக அதே கிராமத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் வேலு என்பவரை நியமித்தனர். அப்போது வேலு தலைமை வகித்து வழிநடத்திச் சென்றார். மக்கள் சார்பாக அரசு தரப்பிடம் பேச்சுவார்த்தை நடத்திய குழு தலைவராக இருந்தார். இந்நிலையில் அவர் உடல்நலக் குறைவால் உயிரிழந்தார்.



இது அந்த கிராம மக்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில் அவரது விருப்பப்படி அவரது உடல், கண்கள் தானமாக வழங்கப்பட்டது. ஏற்கனவே அவர் லயன்ஸ் கிளப் மூலம் தான் இறந்த பின் தனது கண்களை தானமாக வழங்க உறுதி அளித்திருந்தார். அதன் அடிப்படையில் லயன்ஸ் கிளப் நிர்வாகிகள், மருத்துவக்குழுவினர் மூலம் அவரது உடலில் இருந்து கண்களை எடுத்துச் சென்றனர்.

அதேபோல உடலை தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு தானம் செய்ய வேலு ஆசிரியர் உறுதியளித்திருந்தார். அதன் பேரில் வேலு உடலை ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

வேலு ஆசிரியரின் உடல் நெடுவாசலில் உள்ள அவரது வீட்டில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அவரது உடலுக்கு அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் இறுதி மரியாதை செலுத்தினர். பின்னர் வேலு ஆசிரியர் குடும்பத்தினர் இறுதி சடங்குகளை செய்து ஊர்வலமாக எடுத்துச்சென்றனர். தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முறைப்படி அவரது உடலை தானம் செய்தனர்.








▶ வேலூர் தி.மு.க., மாவட்ட செயலாளரும், திருமலை திருப்பதி தேவஸ்தானம் அறங்காவலர் குழு உறுப்பினரும், அணைகட்டு எம்.எல்.ஏ.,வுமான நந்தகுமார் தனது செலவில் பக்தர்களை திருப்பதி செல்லும் வகையில் 12 பேர் அமரக்கூடிய வாகனம் ஏற்பாடு செய்து மாவட்ட தி.மு.க., அலுவலகத்திலிருந்து திருமலை திருப்பதிக்கு அனுப்பி வைத்தார்.

# அரியலூர் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப விளக்கமளிப்பு



அரியலூர், நவ.27–

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரமண சரஸ்வதி, தலைமையில் நடைபெற்றது.

வேளாண் அறிவியல் நிலையம் சோழமாதேவி மூலம், நடப்பு மாதத்திற்கான விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து அனைத்து விவசாயிகளுக்கும் விளக்கிக் கூறப்பட்டது.

இக்கூட்டத்தில், விவசாயிகள் நேரடியாக கலந்துகொண்டு வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், மின்சாரம், கால்நடை, பொதுப்பணி, வருவாய் மற்றும் கூட்டுறவுத்துறை தொடர்பான கோரிக்கைகள் விவசாயிகளால் எழுப்பப்பட்டது.

இதில், துறைவாரியாக சம்பந்தப்பட்ட அலுவலர்கள், விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதில் அளித்தனர். விவசாயிகள் அளித்த மனுவிற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க அனைத்துத் துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் கலைவாணி, வேளாண் இணை இயக்குநர் பழனிசாமி மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஏளாவூரில் தி ஸ்டடி குளோபல் பள்ளி அடிக்கல் நாட்டு விழா தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி பங்கேற்று மரக்கன்று நட்டார்





ஊத்துக்கோட்டை,நவ.27–

சென்னை, செங்குன்றம் அருகே திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், ஏளாவூர் கிராமத்தில் டாக்டர் கே.எம்.செரியன் எஜுகேஷனல் சொசைட்டி மற்றும் கே.எம்.செரியன் ஹார்ட் பவுன்டேஷன் உள்ளது. இங்கு புதுச்சேரியில் அமைந்துள்ள தி ஸ்டடி லோகேல் இன்டர்நேஷனல் பள்ளியின் கிளையாக உலகத்தரம் வாய்ந்த தி ஸ்டடி குளளோபல் கல்வி நிலையம் அமைக்கப்படுகிறது.

இந்தப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டு விழா மற்றும் மரக்கன்றுகள் நடும் விழா பிரான்சியர் சயின்ஸ் பார்க் வளாகத்தில் உள்ள பேராசிரியர் உள்ளால் ஆடிட்டோரியத்தில் நேற்று மதியம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, டாக்டர் கே.எம்.செரியன் எஜுகேஷனல் சொசைட்டி மற்றும் கே.எம்.செரியன் ஹார்ட் பவுன்டேஷனின் நிறுவனத்தலைவர் டாக்டர் கே.எம்.செரியன் தலைமை தாங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக மொரீஷியஸ் கல்வி, கலை, கலாச்சாரம் மற்றும் அறிவியல் அமைச்சராகவும், உலக வங்கியில் மூத்த ஆலோசகராகவும் பணியாற்றிய பேராசிரியர் ஆறுமுகம் பரசுராமன் கலந்து கொண்டார். இதில் சிறப்பு விருந்தினராக தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டு தி ஸ்டடி குளோபல் பள்ளிக்கு அடிக்கல் நாட்டி பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு சிறப்புரை ஆற்றினார்.

முன்னதாக பிரண்டியர் லைப் லைன் ஆஸ்பத்திரி துணைத் தலைவர் சந்தியா செரியன் வரவேற்றார். நிறுவனத் துணைத் தலைவர் சஞ்சய் செரியன் நன்றி கூறினார்.

இதில், ஏராளமான டாக்டர்கள், கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.








▶ சென்னை, தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணைய கூட்டரங்கில் நடைபெற்ற அரசியலமைப்பு தின விழாவில் சட்டமன்ற பேரவை தலைவர் அப்பாவு உரையாற்றினார். தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் நீதிபதி எஸ். பாஸ்கரன், தமிழ்நாடு அரசின் புது தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ கே எஸ் விஜயன், அரசு தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய தலைவர் ஏ எஸ் குமரி, சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வப் பெருந்தகை, மரகதம் குமரவேல், சின்னத்துரை மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பாம்பாற்றின் மணல் குவாரியை உடனே மூட வேண்டும் திருப்புனவாசல் அருகே மக்கள் கண்டன ஆர்ப்பாட்டம்





ஆவுடையார்கோயில், நவ.27–

புதுக்கோட்டை மாவட்டம் திருப்புனவாசல் பகுதியில் ஓடுகின்ற பாம்பாறு தென்கரை பகுதி ராமநாதபுரம் பகுதியிலும், வடகரை பகுதி புதுக்கோட்டை மாவட்ட பகுதியிலும் உள்ளது. தென்கரையில் ராமநாதபுரம் மாவட்ட பகுதியில் மணல் குவாரி அமைக்கப்பட்டு கடந்த ஒரு மாத காலமாக மணல் அள்ளப்படுகிறது.

அந்த பாம்பாற்றில் வடக்கு பகுதி புதுகை மாவட்ட எல்லைக்குள் வருவதால் அத்துமீறி மணல் குவாரி நடத்தும் அரசு நிர்வாகிகள் புதுகை பகுதியில் பாம்பற்றில் வடகரையில் சுமார் 100 மீட்டர் அகலத்திற்கு கரையை சேதப்படுத்தியும் சுமார் 20 மீட்டர் ஆழத்திற்கும் மணல் அள்ளி அரசு வரையறுத்த அளவை மீறி மணல் அள்ளி விற்பதாக மக்கள் குற்றம் சாட்டினர்.

திருப்புனவாசல் பகுதியில் மேல்நிலைப்பள்ளி உள்ளது. அந்த பள்ளிக்கு வரும் குழந்தைகள் அச்சத்துடன் வருகின்றனர். மணல் லாரி போன்ற கனரக வாகனங்கள் அதிக வேகத்தில் அந்த பகுதியில் வருகிறது. இதனால் சாலை குறுகிய அளவில் உள்ளதாலும் எந்த நேரத்திலும் அசம்பாவிதங்கள் நடக்கலாம். அதனால் அந்த கிராம மக்கள் அரசு மணல் குவாரியை உடனடியாக மூட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

பரையத்தூர், கண்ணமங்கலம், புத்தாம்பூர், திருப்புனவாசல் உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்து திடீரென கண்டன கோஷம் எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது.

# கவிஞர் அழ.வள்ளியப்பா நூற்றாண்டு விழா போட்டி பள்ளி மாணவ, மாணவியர் ஆர்வமுடன் பங்கேற்பு




புதுக்கோட்டை, நவ.27–

புதுக்கோட்டை வாசகர் பேரவையும், திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப் பள்ளியும் இணைந்து குழந்தைக் கவிஞர் அழ.வள்ளிப்பா பிறந்தநாள் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதை முன்னிட்டு மாவட்ட அளவிலான பள்ளி மாணவர்களுக்கு அழ.வள்ளியப்பா பாடல் ஒப்புவித்தல், பேச்சு மற்றும் ஓவியப்போட்டிகள் நடத்தப்பட்டது.

போட்டிகளில் 20க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலிருந்து 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். போட்டி நடுவர்களாக ஆசிரியர்கள் சோலச்சி, பழனிச்சாமி, ரமேஷ், மைதிலி, கீதாஞ்சலிமஞ்சன், ரேவதி, கவிஞர்கள் பீர்முகமது, சூர்யாசுரேஷ் யோகாபாண்டியன், ஓவியர் சித்ரகலாரவி ஆகியோர் கலந்துகொண்டு முடிவுகளை அறிவித்தனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வரும் 30ம் தேதி நடைபெறும் கவிஞர் அழ.வள்ளியப்பா பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில் பாராளுமன்ற மாநிலங்களை உறுப்பினர் அப்துல்லா மற்றும் அழ.வள்ளியப்பா குடும்பத்தினர் முன்னிலையில் பரிசுகள் வழங்கப்படும்.

இவ்வாறு வாசகர் பேரவை தலைவர் விஸ்வநாதன் மற்றும் பள்ளி முதல்வர் தங்கம்மூர்த்தி அறிவித்தனர். போட்டி ஏற்பாடுகளை துணை முதல்வர் குமாரவேல், ஒருங்கிணைப்பாளர் கௌரி, ஆசிரியர்கள் கணியன் செல்வராஜ், உதயகுமர் மற்றும் ஆசிரியர்கள் செய்திருந்தனர்.

# அரியலூர் மாவட்டத்தில் போலி மது வியாபாரம் ஒரு பெண் உட்பட 4 பேர் குண்டர் சட்டத்தில் கைது



அரியலூர், நவ.27–

அரியலூர் மாவட்டத்தில், போலி மது பாட்டில் வியாபாரம் செய்த ஒரு பெண்மணி உட்பட நான்கு பேர் மீது குண்டம் தடுப்புச் சட்டம் பாய்ந்தது.

இதுபற்றி அரியலூர் மாவட்ட காவல்துறை வெளியிட்ட செய்தி குறிப்பு விபரம் வருமாறு:

கடந்த அக்டோபர் மாதம் அரியலூர் மாவட்டம், ஒட்டக்கோவில் கிராமம் அருகே, கள்ளத்தனமாக போலி மது பாட்டில்களை வீட்டில் பதுக்கி வைத்து வியாபாரம் செய்த பிரகாஷ் (எ) பிரகஸ்பதி, காலனி தெரு, ராயம்புரம், அரியலூர் மாவட்டம். இனிக்கும்சேட்டு காலனி தெரு, ஒட்டக்கோவில், வினோத், காலனி தெரு, ஒட்டக்கோவில், மதியழகி, காலனி தெரு, ஒட்டக்கோவில் ஆகிய 4 பேரையும் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் துறையினர் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

இவர்கள் வெளியே வந்தால், பல்வேறு சமுதாய சீர்கேடு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவார்கள் என்பதால், குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க வேண்டும் என்று, அரியலூர் மாவட்ட மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் ஆய்வாளர் கவிதா, அரியலூர் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் காமராஜ் ஆகியோர் பரிந்துரை செய்தனர்.

அரியலூர் மாவட்ட போலீஸ் எஸ்.பி., பெரோஸ் கான் அப்துல்லா மேல் பரிந்துரையை ஏற்று, அரியலூர் மாவட்ட ஆட்சியர் ரமண சரஸ்வதி, குற்றவாளிகள் நால்வரையும் குண்டர் தடுப்பு சட்டத்தில் சிறையில் அடைக்க உத்தரவிட்டார். அதன்படி, அதற்கான ஆணை பிரதிகள் திருச்சி மத்திய சிறை மற்றும் திருச்சி பெண்கள் சிறையில் இருக்கும் நால்வரிடமும் வழங்கப்பட்டது.


Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# இந்தி திணிப்பிற்கு எதிர்ப்பு முதியவர் திடீர் தீக்குளிப்பு!

# பாம்பாற்றில் மணல் குவாரி புதுகை அருகே மக்கள் ஆவேசம்!





# மனித குலத்திற்கே பயங்கரவாதம் அச்சுறுத்தல் : ஜெய்சங்கர்


| சென்னை / புதுக்கோட்டை | 27.11.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கணேஷ் வாசுதேவ மாவ்லங்கர் , இந்திய அரசியல்வாதி (பி.1888) (இ.1956)



ஆ. பூவராகம் பிள்ளை , தமிழகத் தமிழறிஞர் (பி.1899) (இ.1973)



உதயநிதி ஸ்டாலின் , தமிழகத் திரைப்பட நடிகர் (பி.1977)



சுரேஷ் ரைனா , இந்தியத் துடுப்பாட்டக்காரர் (பி.1986)



## இன்றைய நினைவு நாள்

வி. பி. சிங் , 7வது இந்தியப் பிரதமர் (பி.1191) (இ.2008)



ஹரிவன்சராய் பச்சன் , இந்தியக் கவிஞர் (பி.1907) (இ.2003)



மாவீரர் நாள் (தமிழீழம்) (தமிழீழம், இலங்கை)